ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 21-7-2014 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

73. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

74. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் ஐம்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. (1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

75. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 323(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

91. மானியக் கோரிக்கை எண் 12 - கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

92. மானியக் கோரிக்கை எண் 13 - உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)